**<u>மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்</u>**

O.S. No. 29 of 2022

பெயர் : விஜயகுமார்

D.W.1

<u>28.1.2026</u>

**<u>பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

எனது தாயார், அவரிடம் கேட்கும் கேள்விகளை புரிந்துகொண்டு பதில் சொல்லும் உடல்நிலையில் இருக்கிறார் என்றால், சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ–1 ஆவணம் புருசோத்தமநாயுடு பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–1ல் 3வது பக்கத்தில் நார்த் ஹெவன் என்று அழைக்கப்படும் பங்களாவுடன் கூடிய 28 சென்ட் நிலம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தச் சொத்தைதான் எனது தாயார் 1965ஆம் ஆண்டில் பி.வா.சா.ஆ–2ன் மூலம் கிரையம் வாங்கினார். அந்த நார்த் ஹெவன் சொத்தில் பங்களா எத்தனை வருடங்களாக இருந்து வருகிறது என்று எனக்கு சரியாக தெரியாது.

எனது தாயாருக்கு எப்பொழுது திருமணம் நடந்தது என்று ஞாபகம் இல்லை. எனது தாயாரின் அப்பா பெயர் நஞ்சமநாயுடு. அவருக்கு 8 பேர் குழந்தைகள். என் தாயார் எத்தனையாவது குழந்தை என்று ஞாபகம் இல்லை. என் தாயாருக்கு கிரையம் கொடுத்த புருசோத்தமநாயுடு, ராமசாமிநாயுடுவின் மகன்.

புருசோத்தமநாயுடு, அவரது தகப்பனாருடன் கூட்டு குடும்பமாக தான் வசித்து வந்தார் என்றால், எனக்கு தெரியாது. புருசோத்தமநாயுடுவிற்கு தனிப்பட்ட வருமானம் இருந்ததில்லை என்றால், எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ–1ல், புருசோத்தமநாயுடு கல்லூரியில் படிக்கும் மாணவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–1ல் என் தாயாரின் தகப்பனாரான நஞ்சமநாயுடுவின் பணம் என் தாயாரிடம் இருப்பதால் சொத்தை கிரையம் வாங்க என் தாயார் தயாராக இருப்பதாக சொன்னதன் பேரில் புருசோத்தமநாயுடு சொத்தை கிரையம் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். அதன் சொத்து விவரத்தில், பழைய சர்வே எண்.743A/1, புதிய சர்வே எண்.743/1 என்றும், அதன் விஸ்தீரணம் 22 சென்ட் என்றும் பி.வா.சா.ஆ–1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த சொத்தின் நான்கு புறமும் புதிய சர்வே எண்.743/1 ல் உள்ள சொத்துக்கள்தான் இருப்பதாக பி.வா.சா.ஆ–1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது.

பி.வா.சா.ஆ–1ன் மூலம் சொத்து என் தாயார் கிரையம் வாங்கியபோது அவருக்கு திருமணம் முடிந்து 10 ஆண்டுகள் இருக்குமா என்றால், எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என் தாயார் கிரையம் வாங்கிய பிறகு, அந்த சொத்தை, கூட்டு குடும்ப சொத்தாகதான் பாவித்து அனுபவித்து வந்தார் என்றால், சரியல்ல. அந்த சொத்தின் பட்டா கூட்டு பட்டாவாகதான் உள்ளது. கூட்டு

பட்டாவில், என் தாயார் பெயருடன், 1ஆம் வாதி, அவரது கணவரும், 2ஆம் வாதியின் தகப்பனாரான ரகுராம் ஆகியோர் பெயரும் உள்ளது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ–1ல் என் தகப்பனார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். பி.வா.சா.ஆ–1ல் உள்ள வீட்டிற்கு 9 கதவு எண்கள் உள்ளது, அவை அனைத்தும் நார்த் ஹெவன் சொத்துதான். அவற்றிற்கான வீட்டு வரிகள் என் தாயார் பெயரில் உள்ளது. அதற்கான ஆவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

பி.வா.சா.ஆ–3 ஆவணம் என் தாயார் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம்தான். என் தாயார் வேலைக்கு எதுவும் செல்லாமல் வீட்டுகுடித்தனமாகதான் இருந்து வந்தார் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ–3ல் கிரையம் கொடுத்த பண்டரிபாபுநாயுடு, ராமசாமிநாயுடுவின் மகன். பி.வா.சா.ஆ–3ல் 6 ஐட்டங்களாக மொத்தம் 18–1/2 ஏக்கர் சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள், எனது கொள்ளுதாத்தா ராமசாமிநாயுடுவிற்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தில் பங்குதான் என்றால், எனக்கு தெரியாது. ராமசாமிநாயுடு எப்பொழுது இறந்தார் என்று தெரியாது. அவர் இறந்தபிறகு, அவருக்கு பாகப்பிரிவினை வந்த 39–1/2 ஏக்கர் சொத்துக்களை, அவரது வாரிசுகள் வாய்மொழியாக பிரித்துக் கொண்டார்கள் என்றால், அது எனக்கு தெரியாது. சர்வே எண்.686/1, 686/2 மற்றும் 686/3 சொத்துக்கள் தற்பொழுது சர்வே எண்.1000/2

மற்றும் 1000/5 ஆக மாறியுள்ளது என்றால், சரிதான். சர்வே எண்.1000/2 உள்ள சொத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்று ஆவணத்தை பார்த்துதான் சொல்லமுடியும். பி.வா.சா.ஆ–3ல் கண்ட சொத்துக்களை கிரையம் வாங்குவதற்கு, என் தாயாருக்கு வருமானம் இல்லை என்றால், அவருடைய தகப்பனார், அவருக்கு அந்தச் சொத்தை கிரையம் வாங்கி கொடுத்துள்ளார்.

பி.வா.சா.ஆ–2ல் என் தாத்தா என் தாயாருக்கு ரூ.3,700/– கொடுத்ததாகவும், என் தாயார் ரூ.10,000/– சொத்தை கிரையம் வாங்கியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ–1ல், என் தாத்தா போஜராஜநாயுடுவிற்கு சர்வே எண்.754Aல் ஒதுக்கப்பட்ட வீடு, அவரால் கட்டப்பட்டது என்றால், சரிதான். அந்த வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் உருளைகிழங்கு குடோன் உள்ளதாக வா.சா.ஆ–1ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனக்கு தெரியாது. உருளைகிழங்கு வியாபாரத்தை, என் தாத்தா போஜராஜநாயுடுவிற்கு ஒதுக்கினார்கள் என்றால், எனக்கு தெரியாது. என் தாத்தா உருளைகிழங்கு வியாபாரம் செய்த விவரத்தை கேள்விப்பட்டிருக்கிறேன். சர்வே எண்.754A சொத்தானது தற்பொழுது சர்வே எண்.713 ஆக மாறியுள்ளது என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து பார்த்தால் அந்த சர்வே எண் குறித்த விவரம் தெரிந்துவிடும் என்பதால்தான், ஆணையர் நியமனத்தை ஆட்சேபிக்கிறேன் என்றால், சரியல்ல. சர்வே எண் மாறிய விவரம் கிராம நிர்வாக

அலுவலருக்கு தெரியும் என்றால், சரிதான், அவரை சாட்சியாக விசாரிப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை.

பண்டரிபாபுநாயுடுவிடம் இருந்து சர்வே எண்.686/3ல் எனது தாயார் கிரையம் வாங்கிய சொத்தை, எனது தகப்பனார், வாதிகள் மற்றும் 1ஆம் வாதியின் கணவர் ரகுராம் ஆகியோர் சேர்ந்து கிரையம் கொடுத்திருக்கிறார்கள் என்றால், சரிதான், ஆனால், மனைகளாக பிரித்து விற்கவில்லை. வா.சா.ஆ–3 ஆவணம், என் தாயார், ராஜேந்திரன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம். அதில் சர்வே எண்.1000/2 என்ற சொத்து கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ–3ல், 1972ஆம் ஆண்டு ஏற்பட்ட ஏற்பாட்டின்படி, சர்வே எண்.1000/2ல் கண்ட சொத்து என் தாயாருக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். சர்வே எண்.1000/2 சொத்தை என் தாயார் கிரையம் வாங்கியிருந்தாலும், வா.சா.ஆ–3ல் கண்ட விவரப்படி, அந்த சொத்து கூட்டாக அனுபவித்துவரப்பட்டு, பின்னர், என் தாயாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவருகிறது என்றால், சரிதான்.

வா.சா.ஆ–4 ஆவணமானது, தீனதயாளன், சரஸ்வதிக்கு எழுதிகொடுத்த கிரைய பத்திரம்தான். தீனதயாளன், போஜராஜநாயுடுவின் ஒரு மகன் என்றால், சரிதான். வா.சா.ஆ–4ல், தீனதயாளனுக்கு வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் சொத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

போஜராஜநாயுடுவின் குடும்பத்தில் சொத்துக்கள் வாய்மொழியாகதான் பிரிக்கப்பட்டிருக்கிறது என்றால், எனக்கு தெரியாது. தீனதயாளன் மற்றும் அவரது வாரிசுகளை, வழக்கில் வாதிகள் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று எதிர்வாதம் செய்கிறேன் என்றால், சரிதான். தீனதயாளன், வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் சொத்தை பெற்று, விற்பனை செய்திருப்பதால், அவரையோ, அவரது வாரிசுகளையோ தரப்பினர்களாக சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றால், எனக்கு தெரியாது.

வா.சா.ஆ–5 முதல் வா.சா.ஆ–10 வரையான ஆவணங்கள் என் தகப்பனார் மற்றும் 1ஆம் வாதி ஆகியோர் சேர்ந்து எழுதி கொடுத்த கிரைய பத்திரங்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ–5 எழுதப்பட்டபோது ரகுராம் உயிருடன் இல்லை என்றால், சரிதான். வா.சா.ஆ–5ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ–5ல் கண்ட கிரைய தொகையானது 1ஆம் வாதிக்கு வழங்கப்படவில்லை என்றால், 1ஆம் வாதி, என் தகப்பனார் மற்றும் தீனதயாளன் ஆகியோர் ஒன்றாக சேர்ந்து கிரைய நடவடிக்கையில் ஈடுபட்டார்கள், அவர்களுக்கு இடையே தொகை பிரிக்கப்பட்டிருக்கும். நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல. வா.சா.ஆ–7 ஆவணமானது, என் தகப்பனார் மற்றும் 1, 2 வாதிகள் ஆகியோர் சேர்ந்து எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால், சரிதான். அதில் குறிப்பிட்ட பொது அதிகார பத்திரமானது

நோட்டரி பப்ளிக் முன்னிலையில் ஏற்பட்ட ஆவணம் என்றால், சரிதான். வா.சா.ஆ–7ல் குறிப்பிட்ட தொகையும் வாதிகளுக்கு வழங்கப்படவில்லை என்றால், எனக்கு தெரியாது. வா.சா.ஆ–7ல் சர்வே எண்.58/3 மற்றும் 58/4ல் 2 செண்ட் விஸ்தீரனமுடைய சொத்து கிரையம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ–7ல் உள்ள பொது அதிகார முகவரான கலாவதி என்பவர், என் சித்தப்பா தீனதயாளனின் மனைவி. வா.சா.ஆ–7ல் உள்ள முதலாவது சாட்சி, இந்த வழக்கின் 2வது பிரதிவாதி. அவருடைய வசிப்பிடம் ஓம்கண்ணாரம் பில்டிங் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.ஆ–8 ஆவணமானது என் தகப்பனார் மற்றும் வாதிகள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம்தான். அதிலும் கலாவதி பொது அதிகார முகவராக உள்ளார். என் தகப்பனாரும், வாதிகளும் சேர்ந்து கொடுத்த கிரைய பத்திரங்களுக்கான தொகைகளை வாதிகளுக்கு கொடுத்ததை காட்டுவதற்கு என் தகப்பனார் வாதிகளிடம் இருந்து ரசீது எதுவும் பெற்றிருக்கவில்லை என்றால், சரிதான்.

வா.சா.ஆ–9 ஆவணமானது, என் தகப்பனாரும், 1ஆம் வாதியும் மற்றும் தீனதயாளனும் சேர்ந்து ஜார்ஜ் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால், சரிதான். சர்வே எண்.58/3 மற்றும் 58/4 சொத்துக்கள், பாகப்பிரிவினையில் என் தாத்தா போஜராஜநாயுடுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றால், சரிதான். வா.சா.ஆ–10 ஆவணமானது என் தகப்பனாரும்,

1ஆம் வாதியும் மற்றும் தீனதயாளனும் சேர்ந்து கனகமணி என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால், சரிதான். அதில் என் தகப்பனாரின் வசிப்பிடம் ஓம்கண்ணாராம் பில்டிங் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். வா.சா.ஆ–10 ஆவணமானது என் தகப்பனாரும், வாதிகளும் மற்றும் தீனதயாளனும் சேர்ந்து விஜயன் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால், சரிதான். வா.சா.ஆ–12 ஆவணமானது என் தகப்பனாரும், வாதிகளும் மற்றும் தீனதயாளனும் சேர்ந்து ரிச்சர்டு என்பவருக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்றால், சரிதான்.

நான் வா.சா.ஆ–5 முதல் 10 கிரைய பத்திரங்கள் எழுதி கொடுப்பதற்கு என்னிடம் யாரும் கருத்துரு கேட்கவில்லை. சாட்சி, வா.சா.ஆ–12 ஆவணத்தை பார்த்துவிட்டு, அதை தயாரித்தவர் பெயராக தன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்கிறார். எந்த கிரைய பத்திரத்திலும், எங்களுடைய வசிப்பிடம் நார்த் ஹெவன் என்று குறிப்பிடப்படவில்லை, ஓம்கண்ணாராம் பில்டிங் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். சர்வே எண்.754 சொத்திற்கும், தாவா 1ஆம் ஐட்டச் சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. நான் சொல்வது பொய் என்றாலும், தாவா 1ஆம் ஐட்டச் சொத்துதான் ஓம்கண்ணாராம் பில்டிங் என்று அழைக்கப்படும் சொத்து என்றாலும், சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் மூலம் ஓம்கண்ணாராம் பில்டிங் மற்றும் நார்த் ஹெவன்

ஆகியவை ஒரே சொத்து என்று என்னால் நிரூபிக்க முடியும்.

சீதாராமன் மனைவி பெயர் அங்கம்மா. என் தாயார் பெயர் அங்கம்மாள். சீத்தாராமனுக்கு 3 மகன்கள். சீத்தாராமன் இறந்தபிறகு, அவரது மனைவி மற்றும் மகன்கள் சேர்ந்து வா.சா.ஆ–14 ஆவணத்தை என் தகப்பனார், 1ஆம் வாதி மற்றும் தீனதயாளன் ஆகியோருக்கு எழுதி கொடுத்திருக்கிறார்கள். வா.சா.ஆ–14ல், 1980ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1 ஏக்கர் சொத்தை கிரையம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கிரைய தொகையாக ரூ.1,25,000/– குறிப்பிடப்பட்டிருக்கிறது. வா.சா.ஆ–14ன் வாசகங்கள்படி சர்வே எண்.58/3ல் 4 ஏக்கர் விஸ்தீரனம் இருப்பதாக தெரியவருகிறது என்றால், சரிதான். சர்வே எண்.58/3ஐ நாங்கள் மனைகளாக பிரித்து விற்பனை செய்துள்ளோம் என்றால், சென்ட் கணக்கில் விற்பனை செய்துள்ளோம்.

தீனதயாளன், வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் தனக்கு வந்த சொத்தை கிரையம் கொடுப்பதாகதான் வா.சா.ஆ–15ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். தீனதயாளன், சீதாராமன் மற்றும் எனது அத்தைகளுக்கு வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுவிட்டதால், வாதிகளுக்கு சொத்து கொடுக்ககூடாது என்பதற்காகவே அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்ற எதிர்வாதத்தை முன்

வைத்துள்ளேன் என்றால், சரியல்ல. தீனதயாளன் மற்றும் சீதாராமன் ஆகியோரின் வாரிசுகளிடம் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பது பற்றி நான் சொல்லவில்லை. நான் சொல்வது தவறு என்றாலும், நான் அவர்களிடம் சொல்லியும், அவர்கள் தங்களுக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதால்தான், வழக்கில் தரப்பினர்களாக சேர முயற்சிக்கவில்லை என்றாலும், சரியல்ல.

வா.சா.ஆ–16 ஆவணமானது என் தகப்பனார், 1ஆம் வாதி மற்றும் தீனதயாளன் ஆகியோர் சீதாராமனின் மனைவி அங்கம்மாவிற்கு எழுதிகொடுத்த விடுதலை பத்திரம் என்றால், சரிதான். அதில், ராமசாமிநாயுடுவின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தங்களுக்கு வந்த சொத்தை விடுதலை செய்து கொடுப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். பூர்வீக சொத்தில், சீதாராமனுக்கும் பங்கு கொடுக்கவேண்டும் என்பதற்காகதான் அவர் இறந்தபிறகு அவருடைய மனைவி பெயருக்கு வா.சா.ஆ–16ஐ எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், எனக்கு தெரியாது.

வெங்கடேசலுநாயுடு என்பவர் ராமசாமிநாயுடுவின் ஒரு மகன் என்றால், சரிதான். அவர், என் அப்பா, ரகுராம் மற்றும் தீனதயாளனுக்கு வா.சா.ஆ–17 கிரைய பத்திரத்தை, அவருக்குள்ள 1/7 பாகத்தை பொறுத்து எழுதி கொடுத்துள்ளார். அதில் கண்ட சர்வே எண்.823, 825–827, 872/1, 827/2 மற்றும் 828 ஆகியவற்றில்

உள்ள சொத்துக்களை மனைகளாக பிரித்து விற்பனை செய்துள்ளோம் என்றால், சரிதான். வா.சா.ஆ–18 கிரைய பத்திரத்தை 41 சென்ட் சொத்தை பொறுத்து என் தகப்பனார், ரகுராம் மற்றும் தீனதயாளன் சேர்ந்து அங்கம்மாவிற்கு எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ–19 கிரைய பத்திரத்தை என் தகப்பனார், ரகுராம் மற்றும் தீனதயாளன் சேர்ந்து அருணகிரிக்கு எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ–20 கிரைய பத்திரத்தை என் தகப்பனார், 1ஆம் வாதி மற்றும் தீனதயாளன் சேர்ந்து அங்கம்மாவிற்கு எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ–21 கிரைய பத்திரத்தை என் தகப்பனார், ரகுராம் மற்றும் தீனதயாளன் சேர்ந்து ரம்யாவிற்கு எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ–22 கிரைய பத்திரத்தை என் தகப்பனார், 1ஆம் வாதி மற்றும் தீனதயாளன் சேர்ந்து மதுவந்தி எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ–23 கிரைய பத்திரத்தை என் தகப்பனார், 1ஆம் வாதி மற்றும் தீனதயாளன் சேர்ந்து விஜயானந்த்க்கு எழுதி கொடுத்துள்ளார்கள். வா.சா.ஆ–24 முதல் வா.சா.ஆ–38 கிரைய பத்திரங்களை என் தகப்பனார், 1ஆம் வாதி மற்றும் தீனதயாளன் ஆகியோர் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள்.

சர்வே எண்.713/2Aக்கான கனிணி சிட்டாதான் வா.சா.ஆ–39 ஆவணம். அதில் உரிமையாளர்களாக வாதிகள் பெயரும் சேர்த்து 11 நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ–43ல், சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்று

சொல்லப்பட்டுள்ளது என்றால், சரிதான். 1ஆம் வாதியின் கணவர் பெயர் ரகுராம். அவருக்கு எப்போது திருமணம் ஆனது என்று ஞாபகம் இல்லை. 1992ஆம் ஆண்டு திருமணம் நடந்தது என்றால், இருக்கலாம். 2ஆம் வாதி 1993ஆம் ஆண்டில் பிறந்தார் என்றால், ஞாபகம் இல்லை. 2ஆம் வாதிக்கு 1–1/2 வயது இருக்கும் போது ரகுராம் இறந்துவிட்டார் என்றால், ஞாபகம் இல்லை. 1ஆம் வாதி திருமணம் முடிந்த 4 வருடத்திற்குள்ளாகவே ரகுராம் காலமாகிவிட்டார் என்றால், சரிதான். ரகுராம் இறக்கும்போது என் தகப்பனாரும், அவரும் மட்டும்தான் கூட்டு குடும்பமாக இருந்தார்கள் என்றால், சரிதான். ரகுராமிற்கு என் தகப்பனார்தான் திருமணம் செய்து வைத்தார். 1ஆம் வாதியின் தகப்பனார் பெயர் தெரியாது. 1ஆம் வாதியின் சொந்த ஊர் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள கடம்பங்குடி என்றால், சரிதான். 1ஆம் வாதியின் தகப்பனார் பெயரே கடம்பங்குடி எஸ்டேட்காரரர் என்றால், எனக்கு தெரியாது. 2ஆம் வாதி, எங்கள் வீட்டில் இருந்துதான் 7ஆம் வகுப்புவரை படித்தார். என் தகப்பனார் 2007ஆம் ஆண்டு காலமானார். என் தகப்பனார் இறப்பதற்கு முன்பே, வாதிகள் தஞ்சாவூருக்கு சென்றுவிட்டார்கள். நாங்கள்தான் அவர்களை விரட்டிவிட்டோம் என்றால், சரியல்ல. 1ஆம் வாதியின் சகோதரர் அரசு குற்றவியல் வழக்கறிஞராக உள்ளார் என்றால், எனக்கு தெரியாது. வா.சா.ஆ–43 ஆவணமானது என் அம்மாவின் முகவரிக்கு அனுப்பப்பட்டு

திருப்பப்பட்டுள்ளது என்றால், என் தாயார் கோயமுத்தூருக்கு குடி பெயர்ந்துவிட்டார், அதனால் திருப்பப்பட்டிருக்கலாம்.

2ஆம் வாதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால், எங்களுக்கு அதை பற்றி எதுவும் சொல்லவில்லை. எனக்கும், வாதிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. வழக்கிற்கு பிறகுதான் எங்களுக்கு இடையே பேச்சு வார்த்தை இல்லை. எங்களிடம் சொத்தை கிரையம் வாங்கி பான்ட்ஸ் நிறுவனமானது, 2ஆம் வாதி இளவராக இருந்ததால், அவருக்கான பங்கு கிரைய தொகையை நிறுத்தி வைத்திருந்தது. பின்னர், 2ஆம் வாதி உரிமை வயது அடைந்தவுடன் அந்த கிரையத்தை ஏற்றுக்கொண்டு, சம்மத பத்திரத்தை எழுதி கொடுத்து பான்ட்ஸ் நிறுவனத்தில் இருந்து அவர் பங்கு கிரைய தொகையை பெற்றுக்கொண்டார். நான் எனது ஆக்சிஸ் வங்கி கணக்கில் இருந்து 2ஆம் வாதிக்கு பணம் அனுப்பியிருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2ஆம் வாதியின் வங்கி கணக்கிற்கான பட்டியல் என்றால், எனக்கு தெரியாது. 2ஆம் வாதிக்கு, கடந்த 8.4.2013, 27.5.2013, 31.7.2013, 6.9.2013, 28.9.2013 மற்றும் 8.11.2013 தேதிகளில் தலா ரூ.2,000/- மட்டும் அனுப்பியிருக்கிறேன் என்றால், கடந்த 2004ஆம் ஆண்டிலிருந்தே நானும், 2ஆம் பிரதிவாதியும் பணம் அனுப்பியிருக்கிறோம். 2ஆம் வாதி வங்கியில் கல்வி கடன் வாங்கிதான் B.Tec படித்திருக்கிறார். தற்போது ஓம்கண்ணாராம் பில்டிங் என்ற கட்டிடம் உள்ளது. என்னிடம் காட்டப்படும்

புகைப்படத்தில் இருப்பது ஓம்கண்ணாராம் பில்டிங் கட்டிடம்தான். அந்த புகைப்படத்தில், கட்டிடத்தின் முகப்பில் NRB 1949 என்று உள்ளது. அந்த புகைப்படம் வா.சா.ஆ–48. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–45 ஆனது 2ஆம் வாதியின் பிறப்புசான்றிதழ்தான். அதில், அவரது பிறந்ததேதி 29.5.1993 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாதிகளுடன் சேர்ந்து எழுதி கொடுத்த கிரைய பத்திரங்களுக்கான கிரைய தொகையை, என் தகப்பனார் மட்டுமே பெற்று கொண்டுவிட்டு, வாதிகளுக்கு பங்கு கொடுக்கவில்லை என்றாலும், வாதிகளை நாங்கள் தஞ்சாவூருக்கு விரட்டிவிட்டோம் என்றாலும், சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சாஆ–5 ஆவணம் என் தாயார், என் அண்ணனுக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல்தான். அதில், பண்டரிபாபுநாயுடுவிடம் இருந்து சொத்தை கிரையம் வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார். பண்டரிபாபுநாயுடுவிற்கு அந்த சொத்து அவரது தகப்பனாரிடம் இருந்து கிடைத்த சொத்துதான். அந்த சொத்தை நாங்கள் மனைகளாக பிரித்து கிரையம் கொடுக்கவில்லை. அந்த சொத்தும் கூட்டு குடும்ப சொத்து என்பதால், என் தாயார் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்க உரிமையற்றவர் என்றால், சரியல்ல. அந்த சொத்தை கிரையம் பெறுவதற்கு என் தாயாருக்கு வருமான ஆதாரம் இல்லை என்றாலும், என் தகப்பனார் கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்துதான் அந்த சொத்தை என் தாயார் பெயரில்

வாங்கியிருக்கிறார் என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ–6 ஆவணம் என் தாயார் எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம்தான். அந்த சொத்தை என் தாயார் புருசோத்தமநாயுடுவிடம் இருந்து கிரையம் வாங்கினார். அந்த சொத்திற்கான கிரைய தொகையையும் என் தகப்பனார் கூட்டு குடும்ப வருமானத்தில் இருந்துதான் கொடுத்துள்ளார் என்றாலும், அதனால், என் தாயார் எனக்கு செட்டில்மெண்ட் கொடுக்க உரிமையற்றவர் என்றாலும் சரியல்ல. என் தாயார் சாட்சியமளிக்கும் உடல்நிலையில் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், ஆணையர் மூலம் என் தாயாரை விசாரித்தால் உண்மை நிலை தெரிந்துவிடும் என்பதால், அவரை விசாரிக்க ஆட்சேபிக்கிறேன் என்றாலும், சரியல்ல. ஓம்கண்ணாராம் பில்டிங் மற்றும் நார்த்ஹெவன் பில்டிங் ஆகியவை ஒரே கட்டிடங்கள் இல்லை என்றாலும், அவை வெவ்வேறானவை என்றாலும், சரியல்ல.

2ஆம் பிரதிவாதி, சரஸ்வதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம்தான் பி.வா.சா.ஆ–7 ஆவணம். 2ஆம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் அமுலுக்கு வந்ததாக காட்டுவதற்காகதான் பி.வா.சா.ஆ–7 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும், அதற்காக கிரைய தொகையும் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ–9 செட்டில்மெண்ட் ஆவணத்தை என் தாயார் எனக்கு எழுதி கொடுக்கவும் உரிமையற்றவர் என்றால், சரியல்ல. அதில், என்

தாயாரின் முகவரியானது 284, உல்லாடா என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதில் கண்ட சொத்தின் சர்வே எண்.743A/1 என்றும், பழைய சர்வே எண்.743/1 என்றும், அதன் புதிய சர்வே எண்.713/1A என்றும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வாதிகள் வழக்கில் கோரியபடி பாகம் பெற உரிமையுடையவர்கள் என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் கோரியபடி தீர்ப்பளிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

S. CHANDRASEKARAN
Digitally signed by S. CHANDRASEKARAN
Date: 2026.01.28 17:24:11 +0530